10 47 58 11

எனது இல:வகிமா/கூ/திட்/02.
கூட்டுறவுத் திணைக்களம்,
திருகோணமலை,
31.12.1999.

சுற்றறிக்கை இல: 4/99.

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.

**<u>படிவம்-28.</u>**

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது நடைமுறையில் உள்ள படிவம் 28 ஒரு முகாமைத்துவப் படிவமாக பல ஆண்டுகளாக இருந்துவருகின்றது. ஆனால் பல சங்கங்கள் இதற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அத்துடன் கணக்குகள் சரியாகத் தயாரிப்பதுமில்லை. அவ்வாறு தயாரிக்கப்பட்டாலும் அதனை இயக்குநர் சபைக்குச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பது மிகக்குறைவாகவே உள்ளது.

இப்படிவங்களை எனக்கு அனுப்பாது உங்கள் அலுவலகத்திலேயே இவை மீளாய்வு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இப் படிவம் மீளாய்வு செய்யப்பட்டு குறிப்பிட்ட ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியம். இவ்வாறான நடவடிக்கைகள்மூலம் சங்கங்களின் முகாமைத்திறனை அதிகரிக்கலாம்.

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அடுத்துவரும் மாதத்தில் 10ம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட சங்கத்தின் படிவம் 28ஐப் பெற்று தனது அறிக்கையுடன் உதவி ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும். அவர் தனது அலுவலகத்தில் காரியாலயப் பரிசோதகர் ஒருவரிடம் இப்பணியை ஒப்படைத்தல் வேண்டும். அவர் இவற்றை மீளாய்வு செய்து குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சங்கத்துக்கு வழிகாட்டல் அறிக்கையொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் அறிக்கையை சங்கம் இயக்குநர் சபைக்குச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தங்களால் சங்கத்துக்கு அனுப்பப்படும் மீளாய்வு அறிக்கையின் பிரதியொன்றை தவறாது எனக்கு அனுப்பிவைக்கவும்.

தங்கள் அலுவலகத்தில் படிவம் 28 மீளாய்வு செய்து தயாரிக்கப்படும் அறிக்கை பினவரும் பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

01. அங்கீகரிக்கப்பட்ட சங்க பாதீட்டிற்கும் பெறுபேறுகளுக்கும் இடையிலான விலகல்கள்.
02. சங்க விற்பனை சம்பளத்துக்கு என்ன நூற்று வீதம்.
03. நிதி நிர்வாகச் செலவுகள் பற்றிய குறிப்பும் ஒப்புரவுக் கணக்குகளும்.
04. நட்டமாயின் அதற்கான காரணங்கள், இலாபத்திற்கான வழிவகைகள்.
05. மொத்த விற்பனையில் காசு விற்பனை என்ன விகிதம்.
06. சோர்வுகள், சோர்வு அறவீடுகள் தொடர்பானவை.
07. வாகன எரிபொருள் நியம மீறல்கள்.
08. நட்டத்தில் இயங்கும் கிளைகளும் பரிகாரங்களும்.
09. இயக்குநர் சபைச் செலவினங்கள்.
10. முன்னேற்றத்திற்கான வழிவகைகள்.

எதிர்வரும் ஜனவரி 2000ஆம் ஆண்டிலிருந்து மேற்குறிப்பிட்டவாறு மீளாய்வுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் இவ்விடயம் தொடர்பில் உங்களால் செய்யப்படும் ஒழுங்குகள் பற்றி எனக்கு அறியத்தரவும்.

க.சிவசிதம்பரம்
கூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்(வகி).